©
GOVERNMENT OF TAMIL NADU
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 161] CHENNAI, FRIDAY, JUNE 15, 2012
Aani 1, Thiruvalluvar Aandu–2043

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

### REVENUE DEPARTMENT

*Secretariat, June 15, 2012.*

**[ஆட்சி எல்லை – தமிழ்நாட்டில் மக்கள் தொகைக்கு ஏற்ப புதிதாக வட்ட அலுவலகங்கள் பிரிப்பது தொடர்பாக ஆராய அலுவலர் குழு அமைத்தல் ஆணை வெளியிடப்படுகிறது.]**

**No. II(1)/REV/14(f)/2012.**

கீழ்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது :—

*[அரசாணை (2டி) எண் 176, வருவாய்த் [வ.நி.1(1)] துறை, 15 ஜூன் 2012.]*

படிக்கவும்:

(1) அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 09–06–2003.

(2) 08–05–2012 அன்று சட்டப்பேரவை விதி 110 இன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு

(3) முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண் பணி 6(4)/14957/12, நாள் 19–03–2012.

**ஆணை:** (2டி) எண் 176, வருவாய்த் [வ.நி1(1)] துறை, 15 ஜூன் 2012.

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் பிரிப்பது தொடர்பாக மக்கள் தொகை, பரப்பளவு மற்றும் வருவாய் கிராமங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் அளவுகோல் நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**2.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16–03–2012 அன்று நடைபெற்ற வருவாய்த் துறை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில், தற்போது வட்ட அளவில் உள்ள மக்கள் தொகை, அளவுகோலின்படி சீராக இல்லை எனவும், சில வட்டங்களில் மக்கள் தொகை அளவுகோலில் குறிப்பிட்ட அளவைவிட மிகவும் குறைவாகவும், சில வட்டங்களில் மக்கள்தொகை அளவுகோலைவிட அதிகமாகவும் உள்ளன என்றும் இதனை கருத்தில் கொண்டு நான்கு இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை கொண்ட பகுதிகளை ஒருங்கிணைத்து புதிய வட்டங்களாக பிரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அதன்படி தமிழ்நாட்டில் ஆண்டிற்கு சராசரியாக 20 வட்டங்கள் வீதம் மூன்றாண்டுகளில் மொத்தம் 62 வட்டங்கள் புதிதாக ஏற்படுத்தப்படும் எனவும் அறிவித்திருந்தார்கள்.

**3.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்படி அறிவிப்பிற்கிணங்க, வட்ட அளவில் (Taluk Level) மக்கள் தொகையின் அடிப்படையில் புதிய வட்டங்கள் பிரிப்பது தொடர்பாக அரசுக்கு ஆலோசனை வழங்க குழு ஒன்று ஏற்படுத்தப்படும் என மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்கள் சட்டமன்றத்தில் 28–03–2012 அன்று அறிவித்தார்கள்.

**4.** கால விரயமின்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்பதையும், வட்டாட்சியர் அலுவலகம் திறம்பட செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, நான்கு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகையினைக் கொண்ட வருவாய் வட்டங்களைப் பிரிக்கவும், இதனை நிறைவேற்றும் பொருட்டு, தமிழகத்திலுள்ள வருவாய் வட்டங்களின் மக்கள் தொகை, பரப்பளவு, வருவாய் கிராமங்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு அரசுக்கு பரிந்துரை அளிக்க வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர் மற்றும் நில சீர்திருத்தத் துறை ஆணையர் ஆகியோரைக் கொண்ட ஒரு அலுவலர் குழு அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **08–05–2012** அன்று சட்டப்பேரவையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110** இன்கீழ் அறிவிப்பு வெளியிட்டிருந்தார்கள்.

**5.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க, கீழ்க்கண்ட மூன்று உயர் அலுவலர்களைக் கொண்டு அலுவலர் குழு ஒன்றை ஏற்படுத்தலாம் என அரசுக்கு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்.

(i) முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்

(ii) முதன்மைச் செயலாளர் / நில நிருவாக ஆணையர்

(iii) முதன்மைச் செயலாளர் / நிலச் சீர்த்திருத்த ஆணையர்

**6.** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க வட்ட அளவில் (Taluk Level) நான்கு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகையினைக் கொண்ட வருவாய் வட்டங்களைப் பிரித்து, புதிய வட்டங்கள் தோற்றுவிக்க ஏதுவாக, முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட கீழ்க்கண்ட மூன்று அலுவலர்களைக் கொண்டு குழு ஒன்றை அமைக்க அரசு ஆணையிடுகிறது.

(i) முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்

(ii) முதன்மைச் செயலாளர் / நில நிருவாக ஆணையர்

(iii) முதன்மைச் செயலாளர் / நிலச் சீர்தித்ருத்த ஆணையர்

**7.** இக்குழு இரண்டு மாத காலத்திற்குள் அரசுக்கு தனது பரிந்துரைகளை அளிக்கும். இக்குழுவின் பரிந்துரைகளை பரிசீலித்து அரசு தக்க முடிவினை அறிவிக்கும்.

**8.** மேலே பத்தி **6, 7**–இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ரமேஷ்ராம் மிஸ்ரா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU